சிவமயம்.
கணபதி துணை.

செவ்வலூர்

மதுவநாயகியம்மை
பதிற்றுப்பத்தந்தாதி.

மதுரைஜில்லா காரைக்குடி
பி. ரா. ம. கு. மெய்யப்பச்செட்டியாரவர்கள்
குமாரரும், ஸ்ரீலஸ்ரீ, அ. வன்றொண்டச்செட்டியாரவர்கள் மாணாக்கருளொருவருமாகிய
மெய்யப்பச்செட்டியாரவர்கள்
இயற்றியது.

இஃது,
மேற்படி காரைக்குடி
ப. ள. மெ. மெய்யப்பச்செட்டியாரவர்கள்
குமாரரும் ஷை ஊர் சி. மெ. மெய்யப்பச்செட்டியாரவர்கள் சிநேகருமாகிய
மெய்யப்பச்செட்டியாரவர்களால்
சிங்கப்பூர்,
நிரூதயவேர்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது
விய ௵ ஆவணி ௴.

சாற்றுகவி.

கூத்தனூர்,
ரா. ம. வேங்கடாசலச் செட்டியாரவர்கள் குமாரர்,
இராமனாதச் செட்டியார்
இயற்றியது,

அல்லிமலர்த் தடம்புடைசூழ்திருக்
காரைநகர் வருமெய்யப்பமேச,
மெல்லையில் சீர்வன்றொண்டத் தடங்கடலிற்
றமிழ்நீர் மொண்டினிதாயுண்டு,
மல்லல்வளச் செவ்வலூர் மதவம்மை
பசியபுயவளையிலி யார்க்குஞ்,
சொல்லரியபதிற்றுப் பத்தந்தாதிப்பா
மழையைச்சொரிந்ததன்றே.

உ.

சிவமயம்.

கணபதிதுணை.

செவ்வலூர்

மதுவநாயகியம்மை

பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

மங்கலம்பெருகு செவ்வலூருடையமதுவநாயகி
யென்மரபெலா
மங்கண் ஞாலமிசையுய்யவந்தருளுமம்மை
தன் கவிதழைக்கவே
பங்கயாசனனெனுர் தாதை சாபவுடல்
பாறவாரருள் பரப்பிய
செங்கையுந்துடைய கங்கையாறுபுனை
சென்னியானையடிமுன்னுவாம்.

சுப்பிரமணியர் துதி.

சாறுதிருத்தியவீதிச்செவ்வலூர்மதுவம்மை
தகைலமயாட.
மாறுதிருத்தியசெங்கோல்வழுதியெனத் தடாதகைதன்
வயின்வந்தெய்தி,

வீறு செருத்தணிசெந்தி பழனிமலைமயின்மலையின்
மேவியாறு,
மாறிருத்தணிமுகத்தெமையளிருசரணன்
பேருவரறுமன்றே.

நூல்.

பொன்னகரும் புலியிடந்தபுயனகருமயன
கரும்புயங்கமேக்த,
மின்னகரும் பன்னகருற்றிசைகருஞ்
சராசரங்கட்கிடனாய்நின்ற
வென்னகரும் பொருளன்றே செவ்வனூரெனக்
கலிகளிசைக்குஞ்சீர்த்தி,
நன்னகரந் தனைக்கவருமதுவம்மைபுகழ்பாடு
நலம்பெற்றோர்க்கே, (௧)

பெற்றனமாகுதலெஞ்சேயரமுதலா
நான்கலையும் பிறவாவின்ப,
முற்றனமாகுதமிதிறமுறுதி நமக்குள
தெனனேயும்பர்தம்பாற்,
பற்றுடனஞ்சயின்றசெழும்பவளவரைக்கொருபாற்
பைங்கொடியைத்தெய்வக்,
கொற்றவையைச் செவ்வனூரரசைமதுமலர்க்
கொம்பைக் குறிப்பாயன்றே. (௨)

குறிப்பறிந்தன்னடியர்பணிசெயவினையேனுலை
விடைக்குருகுமெள்ளிற்,
பிறப்பஞ்சேன் கருமலையிற் பெருமறலி
விழியிலெரிபிறங்கச்சீறு,
மிறப்பஞ்சேனெருதமியேன் வினையிருந்தபதி
சென்னேயமையம்பூத்த,
வறக்கொம்பே மலர்க்கொடியே செவ்வனூருடைய
மதுவம்மேயம்மே. (௩)

அம்மையினுமிம்மையினும் பெறற்கரியபெருஞ்
செல்வமடைந்தார்பல்லோ,
ரும்மையினின்ருள் பரவியஃதுணர்ந்துமுணர்
விலியாயொருநானந்தோ,
மும்மையினுமிவ்வாறே மூர்க்கனுயுடலோம்
பன்முறையோனுனக்,
கொம்மைமுலைச் செந்துவர்வாய்க்கொடியிடையாய்
செவ்வலூர்க்குணப்பொற்குன்றே. (௪)

குன்றமிரண்டெனச் செம்பொற்குடங்களிரண்டெனத்
தந்தக்கொடுங்கோடென்ன,
மன்றலுறப்பூரித்துப்பணைத்திறுமாந்திடு
தனத்தமடவார்தம்மைக்,
கன்றலுறுங்கடுமறலி கொடுங்கூதென்றச்
சமுறுங்கருத்தொன்றெனபா,
லென்றுறநாளுளதாமோ செவ்வலூர்
மதவம்மை யுரைத்திடாயே. (௫)

உரையுணர்வுக்கப்பாலாயனந்தமாய்ப்
பூரணமாயொன்றுயென்றுங்
கரிசிலதாயானந்தமயமாகியுபநிடதக்
கருத்தாயன்பர்,
திருவுளம்விட்டகலா நின்சின்மயமாம்வடிவென்று
தெளிவேன்கொல்லோ,
மரைமலர்ப்பொறறடம் புடைசூழ்செவ்வலூருடைய
மதமலர்ப்பூங்கொம்பே. (௬)

கொம்பனையவரம்பையர் கணடம்பயிலப்பலவிபுதர்
குழாங்கொண்டேத்த,
வம்பனைய விழியுடைய புலோமிசை பாங்குறவ
மருமரசினின்றங்,
கம்பனையு நெடும்பழனச் செவ்வலூர்
மதவம்மை கருணைத்தேறற்,

செம்பதுமப்பதம் பரவியிரந்துண்டு புறங்கிடத்தல்
சிறப்பித்தாமால். (எ)

றெகறுபுன்பறவையெனத் தெருமந்தே
யீடேறத்திரயமெனு,
பிறவிவளிமிடைச்சுழல்வேலைஃதரித்துநீ
வாளாவிருத்தியாயிற்,
பிறிதெவரிங்கெனைப்புரப் பான்னைமுனிவுறிற்
சேயும் பிழைப்பதுண்டோ,
மறைமுடியிற்பொலிகின்ற செவ்வலூர்
மதுவமதுவனசத்தாளாய். (அ)

தாளாண்மையுடையராய் விருப்புவெறுப்பெறு
மீரண்டுஞ் சமமுற்றாராய்,
வேளாண்மைகடந்தாராய் விண்ணலறுமருவருத்து
வெறுத்துளாராய்,
வாளாண்மை மகிடனுயிர்படுத்த செவ்வலூர்
மதுவமயிலின்பொற்றாட்,
காளாண்மையுடையரா மவர்க்கன்றிப்
பரிபாகமணியதன்றே. (கூ)

அணிகுலவுமுலையாலும் புருவவரிச்சிலையாலு
மன்னமென்னப்
பணிவுபெறுநடையாலு மின்னிகரிடையாலும்
பசப்புமாது
ருணர்வுகெடுங்கொடுமோகத்துடழுந்துமெனையு
மொருபொருளாயாண்டாய்,
கணபணகங்கணம்புனையுஞ்செவ்வலூர்
மதுவம்மைகருணையென்னே. (ய)

வேறு.

யென்றுயிர்க்குயிராயின்பவாரியினை
யென்றுணர்க்கரிய விறைவியைப்,

பொன்னகர்க்குமுயர் செவ்வலூருடைய
புங்கவர்க்கரிய புனிதையைச்,
சென்னியிற்பரவுதொண்டருக்கலதுதே
றொணாவமுதைநாடியே.
முன்னைவெம்பவமறுத்துளார்களையு
மோகவேண்மலையமுன்னுமோ. (௰௧)

முன்னுதர்க்கரியமோகவாரியிடை
மூழ்கியே முழுதமூடனு,
யின்னலுற்றவெனையின்பவாரிபுகவென்றுநீ
கிருபைபுரிவையோ,
கன்னலிற்பொலியிருலினிமருவு
கம்பலைக்கிவெருவிக்கதிர்ச்,
சென்னலுற்றவயன்மீனம் வானிலுகள்
செவ்வலூருடைய செல்வியே. (௰௨)

செல்வமும்பெறுவர் கல்வியும்பெறுவர்
சித்தியுள்ளனவுமெய்தவா,
ரல்லலற்றபுவி யிந்திரன்கொலென
வண்டரும்பரவ விறைசெய்வார்,
வெல்லுதர்க்கரியமும் மலப்பகையும்
வென்றுவீடுமெளி துறுவரான்,
மல்லலிற்பெருகு செவ்வலூர்மருவ
வல்லியைப்பரவு வார்களே. (௰௩)

வாரணத்துமசுவத்துமாறிவருவாரு
நின்புகழ் வழுத்துமச,
காரணத்தினிலிவாழ்வுபெற்றநிலை
கண்டுமியானுனை வழுத்திலேல்,
ஆரணத்துமுயராகமத்துமடியாரகத்து
மெழு மமுதமே,
நாரணர்க்கரிய செவ்வலூர்மருவ
நங்கையேயிமைய மங்கையே. (௰௪)

மங்கலம்பெருகு செஞ்சொலாலுனது
    மாணடியங்களை வழுத்திலேன்,
சங்கலம்புனைச்சடைக்கையர்க்குருகு
    தழுகருணையெனையாளலையோ,
கொங்கலமபசழ்கொள் செவ்வனூருடைய
    குமரியே யமார்குழுவுமப்.
பங்கயாசனனுமானுமஞ்சலிசெய்
    பதசரோருக கபாலியே. (௰௫)

பாலலோசனிகபாலிமோலிமதி
    பாரணி கவுமாரியா,
லாலபாரணிநிராமயாகரிசர்
    வாண்மநாயகி யெனுபிவெங்,
காலகாலியுயர் செவ்வனூருடைய
    கன்னியென்ன நவில்வாரெலா,
நாலுமாமுகனுநமனுமுட்குலைய
    னாளும்வேலைகொளுநீரரே. (௰௬)

நீருடைப்பழனமூடுமேதிபுக நீடுவாளை
    வெடிபோய்மழைக்,
காருடைத்தவிமிர்கந்தி சிந்தியெழு
    தெக்கடர்த்துமறி செவ்வனூ,
ரேருடைக்குமரிபினபவாரிதிசைய
    யெண்ணி யெண்ணி யுருகாமனப்,
பாருடைக்கொடிய வெல்வினையெனறுயர்
    படுத்துமோமகிட பாகனே. (௰௭)

பாகமுற்ற மதுரம்பழுத்தகவி
    பாடியந்தகனை யவலனா,
யிலகயற்றவளா யங்கர்சோளிளவ
    லிந்திரனெனை வியம்பியே,
யாகமுற்றபயனெய்திடாதுழது
    மற்பர்வாழ்வுமொரு வாழ்வரோ,

மாகமுற்றுமிளிர் செவ்வலூரினென்
மனத்திருக்குமது வல்லியே. (௰அ)

வல்லியங்களுமரிக்குலங்களும்
வயங்குகானிடை யுவந்திருந்
தெல்லுநண்பகலுயிர்ப் பலித்துறினு
மெய்த்துருர்பயனு னிணையடிப்
பல்லவம்பரவிநெக்குருதவர்கள்
பத்தகோடிபயில் செவ்வலூர்
வில்லிரண்டிதெனுநுதலிரண்டுடைய
விமலசந்த்ரமுக வமலையே. (௰௯)

மலைபழுத்தகனி செவ்வலூருடைய
மங்கலாகரியென் மரபெலா
நிலைமைபெற்றுலகில் வாழநெஞ்சிடை
நினைச்சுநித்திய கல்யாணிவா
னுலகளித்துமகிடற்படுத்தபவா
போகசாதனரு ளத்தலாற்
புலைமனத்தறியொனுமனின்றருள்செய்
பூரணிக்கடிமை புரிகுவாம். (உ௰)

வேறு.

புரிசடாடவியும் புண்டரநுதலும்
பொருசிலைப்புருவமுங்கருணை
சொரியுமுக்கண்ணும் வதனபங்கயமுஞ்
சூலமுமழுவுநல்லபய
வரதமுமாயகரதல நான்குஞ்செவ்வலூர்
மதுவநாயகிபொற
திருவடிமலருமென திருவிழியுஞ்
சிந்தையுநிறைந்துநின்றனவே. (உக)

னின்றனையுலகம்படைக்க நான்முகனுய்
நிறுத்தவைபுரக்கவாணேமி

மன்றலர்துழபப் படலையம்புயத்தா
மாதவனுமெ மாற்றிடவா
னென்றியபுகழ்ச்சேருருத்திரனுமெ
யுனதுசீர் மறைகளுமுணரா
பொன்றலில்புகழ்சேர் செல்வனூராமுற்றே
பொறியிலியுனைக்குமாறெவனே. (௨௨)

யெவனுயிர்க்கிரங்கி மலத்தொடரறப்பா
னெண்ணியைத்தொழிலியற்றிடுவா
னெவடனதொளிபாவிரவியைமதியை
யெண்ணுமங்கியைவிளக்கிடுவா
னெவடனதடியை யெண்ணியவடிய
ரெண்ணியவெண்ணியாங்களிப்பா
னவனெனைமப்புரப்பான் செவ்வனூரிடத்தே
யருளுருக்கொண்டவாரணியே. (௨௩)

ஆரணப்பருப்புமாகமப்பரப்பு
மாசறத்தெளிந்துளமடங்கும்
பூரணத்தவத்தப் புலவர்கட்கலது
பொருப்பெனமருப்பெனப் பணைத்த
வாரணத்தனத்துமடந்தையர்மேக
வலைப்படுமெனக்கும்வந்தருமோ
தாரணிக்கினிய செவ்வனூருடைய
சாம்பவிமரகதக்கொடிசரணே. (௨௪)

சரணெனவுனது சரணபங்கயமே
சந்ததநினைந்தெக்குறுதும்
புரணவன்புடைய புண்ணியர்பணியிப்
புலையனேற்கருளுநாளுளதோ
கருணையங்கடலே கடையனேன்மரபின்
கலைகளேகண்ணகன்ஞாலத்
தரணமே செவ்வற்பதியில் வீற்றிருக்கு
மன்னமேயருமறைப்பொருளே. (௨௫

மறைப்பொருளுள்ளவா றுணர்ந்துனையே
மனத்துறநினைந்துதற்போத
மிறப்பவானந்தவுததியிற்றிளைக்கு
மின்பவாழ்வெனக்குவந்துறுமோ
பிறப்பெனுமிரியாப் பெரும்பிணியிரிப்பான்
பெருக்கெடுத்தொழுகுதெள்ளமுதே.
யறக்கிளைகிளைத்துச் செவ்வலம்பதியி
லகிலமும்பழுத்தபொற்கொடியே. (உசு)

கொடியிடைக்கருங்கட் செய்யவாய்ப்பசுந்தோள்
வெண்ணகைக்குவிமுலைக்கோலப்
பிடிநடைச்சுவணப் பிறைநுதன்மடவார்
பேரெழிற்குழைந்தனன்றமியேன்
படியெலாம்பழுத்தபசியகற்பகமே
பாகசாதனன்முதற்றேவர்
முடிசெழுசரண பங்கயச்செவ்வற்
பதியில்வாழ்முடிவிலாமுதலே. (உஎ)

முடிவிலாமுதலே பழமறைக்கொழுந்தே
மூர்க்கனென்றிகழ்ந்திடாதடியேன்
குடிமுழுதாண்ட பெருங்குணசலமே
குஞ்சரக்குருளைபாலுகர
வடவரியளிக்குஞ்செவ்வலம்பதியி
லரசுவீற்றிருக்குநின்கருணை
வடிவமுண்ணினைந்து மனோலயம்பெறுமெய்
வாழ்வுமெற்குளதுகொல்வமுத்தே. (உஅ)

வழுதியர்குலத்தோராற்றியதவமுங்
காஞ்சனமாலைமுன் னுஞற்றும்
பழுதறுதவமுமுலகின்மன்பதைகள்
பரிந்துமுன்புரிந்தமாதவமுந்
தழையமும் முலையோடவதரித்துலகந்
தாங்கியதலைவிநின்பதமக்

கழலிணைபரவிச் செவ்வலூர்நினையுங்
கருத்தெனக் களித்தனின்கடனே. (௨௯)

கடனிறம்படைத்தசெங்கண்மாலொருமுநின்
கழலிணைகருத்திடைநினையேன
விடயவாதனையிற் கழிக்தநின்னடியர்
மேவியசங்கமுவிரும்பேன்
மடநடைமடவார் போகமேபொருளா
மதித்தனன் மறலியைக்கடக்கும்
படியொருநெறியு முணர்ந்திலேன்செவ்வற்
பதியுறை மருவநாயகியே. (௩௰)

வேறு.

நாயகியாய்ப்பல்லுயிரு நல்கும்பெருங்கருணைத்
தாயானநின்னைத் தமியேனயர்த்தனனு
னீயேவந்தாண்ட நிலைமைநிகழ்த்தவறரோ
னாயபுகழ்ச்செவ்வலூர்த் தோன்றுத்தனித்துணையே (௩௧)

தோன்றுத்துணையாய்த் தொழும்பருளத்தாமரையி
னான்றுங்கருணையுடையதனிப்பூரணியைத்
தேன்றதும்புபைஞ்சோலைச் செவ்வலூர்நாயகியை
நான்றுனென்செய்ததவ நற்கவிகொண்டேத்துதற்கே.*

யேத்திப்பரவியிறைஞ்சி யெழிற்செவ்வலூர்
மூர்த்திமருவம்மை முளரித்திருத்தாளிற்
றோத்திரப்பாமாலை தொடுத்தணிவேற்குண்டுகொலோ
நாத்திகராயுண்ணு நரகக்கொடுந்துயரே. (௩௩)

கொடுந்துயரக்கோட் பட்டுக்கோதையர்கண்மோகத்
தடஞ்சுழியின்மூழ்கித் தடுமாறிப்பொய்யா
முடம்புபொருளென்றலைவேற் குண்டுகொலோசெவ்வற்
றடம்பதிவாழம்மை சரணமடையுஞ்சார்பே. (௩௪)

சார்புனேயயன்றித் தமியேற்கிலையென்கை
யோராதமுற்றுமுணர்ந்த நினக்கோதுவதென்
வாராடரவணிந்த மங்கலையே செவ்வலூர்ப்
பூரணியேயென்னைப் புரத்தல்கடனுனக்கே (௩௫)

உனைப்பதியாமெந்தைதனை யுன்னுவதுநுங்கண்
மனக்கினியவன்பர்களை வாழ்த்துவதுமல்லாமல்
வினைக்கயிற்றாரும்பாயும் வெண்டுவனோசெவ்வற்
தனிப்பதியிலெவ்வுயிர்க்குந் தாயான நாயகியே. (௩௬)

நாயகியைச் செவ்வலூர் நாரணியைநற்புவன
மாயழலாய்ப்பைம்புனலாய் வாதமாய்மன்னியவா
காயமதாயெங்குங் கலந்தாளைக்கண்ணுகிலாய்
தியமனமேமறலிசெற்ற முனைராய்போலும் (௩௭)

செற்றமொழிந்து செருக்ககன்று திமையற்றங்
குற்றதுணையெம்மைக்கு முன்னடியே யென்றுணர்ந்து
கற்றவருக்கன்றிக்கடையேற்குமுண்டுகொலோ
நற்றவர்சேர்செவ்வன்மதுவம்மைநல்லருளே. (௩௮)

நல்லருளைநாடேனுன் னுண்மலர்த்தாளஞ்சலியேன்
பொல்லாமடவார் புணர்ப்பினிடைப் புகுதியைவிட்
டொல்லாநெறிபுக்குழல்வேற்குமுய்வுளவோ
செல்லார்பொழிற் செவ்வலூருடையசிற்பரையே. (௩௯)

சிற்பரையைநங்கள்குல தெய்வத்தைச் செவ்வலூ
ரற்புதத்தையுண்ணுவமூர்த்தத்தையண்டர்பெருக
கற்பகத்தைஞானக் கடலைப்பரவுவார்க்
குற்பவமுமுண்டோவுளதேயோ சாக்காடே. (௪௰)

வேறு.

காட்டிற்புக்கென் கனலிடைநின்றமென்
வீட்டுமுண்டியிகந்து மென்செவ்வலூர்

காட்டமூன்றுடை நாயகிதாடொழார்
மாட்டிறப்போது மறலிக்கிளைப்பரே. (௪௧)

இளைத்தநாடி யெழும்பியசைய்யெனுக்
கிளைத்துளார்வந்து கட்டியிரங்குமுன்
றிளைத்தவன் பொடிறைஞ்சுமின்செவ்வலூர்
வளைத்தடக்கை மதுவம்மைதாள்களே. (௪௨)

தாளையுன்னித் தளைத் தொழுமன்பருக்
காளெழும்பிசென் றெனைக்காக்குமோ
நாளுமுண்டகாண்மலர் வாவியிற்
காலைவண்டிமிர்செவ்வனமுக் கண்ணியே, (௪௩)

கண்ணிற்கண்ட களிப்பிலகாலையி
லெண்ணுமுப்பி லௌமையிலிற்றனை
வுண்ணினைத்தடங்காவுளஞ் செவ்வலூர்த்
தெண்ணிலாமதிச் செஞ்சடைச்செல்வியே, (௪௪)

செல்லிருக்குமபொழிலுடைச் செவ்வலூ
ரல்லிருக்குங்குழன் மதுவம்மைதாள்
கல்லிருப்பிற் கடியவென்றுள்ளத்தும்
புல்லியின்பப் புணரிலயக்காட்டுமே. (௪௫)

காட்டல்காண்டலுங் காட்சியுநீவிளை
யாட்டலிற்றயலிலமுமாக்குதி
யீட்டுநின்புக ழெண்ணவற்றோசெவ்வற்
கோட்டுவெம்முலைக்குன்றக்குமரியே, (௪௬)

குமரியம்பிகை யென்றனைக்கூறியே
சமரவெம்முனைச் சண்டற்கடந்திலர்
திமிரமுற்றவர் சிற்சிலர் செவ்வலின்
னமருக்கு மறிவருமன்னையே. (௪௭)

அன்னையே புன்னடித்தலையன்றியே
யின்னையோர்புகல் கண்டிலன்பேதையே

னென்னைநீகைவிடேலெழிற் செவ்வலூற்
பொன்னிறைஞ்சும் புணர்முலைப்பூவையே. (௪௮)

பூவையும் மடப்பொற்கிளியுந்தமி
லாவலோடு மறைப்பொருளாய்பொழிற்
றேவர்கைதொழுஞ்செவ்வற்புராதனிக்
காவதன்பெனிருகு மெய்யார்வமே. (௪௯)

ஆர்வமுற்றனையா னடைந்தேனருள்
சோர்வொழித்தநின் றொண்டர்க்குற்றேவலைப்
பார்வழுத்துறுஞ் செவ்வற்பதியில்வாழ்
சூர்வலத்தவெஞ்சூலுடைத்தோகையே. (௫௰)

வேறு.

தோகைமயிலாடமாடக் களிவண்டுஞிமிறுஞ்
சுரும்பினமுமிசைபாடநா தருமமலிசெவ்வற்
போகநகர் திகரில்லாப்புனிதநகரிடத்தேபொறி
யிலியெங்குடிமுழுதும் புரக்கவெழுந்தருளும்
பாகனையமொழிக்கரும்பை யடியருளமகிழ்கும்
பசுந்தேனைக்கனியளிக்கும் படியமர்கற்பகத்தை
யேகமெனவகிலமெனவிருந்தவளைப்பாவி
யிரவுபகலொருவுமிடத்திருத்தலவர்க்கெளிதே (௫௧)

யெளிதடியர்தமைத்தேடியருள்புரிதல்விரதமெனக்
கொண்டநீயிருப்ப நறாநகளிர்களிருப்ப
நளிர்புனலுமெவ்விடத்துமிருப்பவொருதமியேனுண்
முழுதுமடந்தையர் கணசையாலேசுழித்தே
னளியனெனைக்கைவிடேல் வேடமலாதுளாததே.
யன்பின்மைநீ யறிகியுலகறியாவன்றே
தெளியுமனத்திருளொழிக்குஞ் சுடர்மணித்தீபிகையே
செவ்வலூர்மருவியசச் சிதானந்தப்பிழம்பே. (௫௨)

பிளவுமதிதவழுமுடிமரகதமாமலையே
பிறங்குமடியவருளத்தே பெருகுசுவையமுதே
தளவுமுகையனைய நகையுடைய பசுங்கிளியே
தாயாகியகிலசராசரமுமளித்தவளே
புளகமுலைக் கோடிரண்டுபொருத்தமடப்பிடியே
பொதியிலியென் குடிமுழுதும் புரக்குமருட்கடலே
வளமருவு செவ்வனகருடைய மதுக்கொடியே
வழங்குதிபுன்மதச்சேற்றிலழுந்தாதவரமே. (௫௩)

வரமெனக்கங்கது செவ்வற்பதியிலருள்கொழிக்கு
மதுவநாயகியளித்தல்வேண்டுமடந்தையர்கள்
புரிகரம்பினிசைபாடவரம்பயர்களாடப்
பூந்தருவினிழலிடைப் பொலிவாழ்வுற்றிடினு
நிரையவரிசையிற்கிடந்து சுழன்றிடினுமலது
நேரிழையர்மோகசாகரத்திடை மூழ்கிடினும்
விரவுபுழுவாதியபுன்பிறப்பினிடைப்புகினும்
வேண்டுவனின்றிருவடியில் விடாதவிருப்பே. (௫௪)

விருப்பமொருகணமேனுமுன்னடிக்கண்ணிறுவேன்
வெற்றுடலேபொருளாகவிழைந்துமனங்களிப்பேன்
கருப்பனுகைத்திடவரு புங்கவத்திறளமருண்டேகடைப்
பட்டமடந்தையரேகதியென்றுதிரிவேன்
செருப்பயின்ற மகிடனுயிரழித்தமாற்புரந்ததிரி
புராவென்றுனைபாடிச் செவ்வனூரடைந்தே
பொருப்பனையசிகர சினகரம்புகுந்துபரவேன்
பொதியிலியெனகடைநாட்கும் புகலுண்டோபுகலே

புகலிடமிங்குனையன்றிப்பிறிதொன்றுமுணரேன்
புண்ணியஞ்சேர் செவ்வனூருடையதிரிபுரையே
பகையுறவுவிருப்புவெறுப் பறத்துயில்வோன்றன்
கைப்படுபொருளிற்கிரியையொருவிலராகிப்பகையு

மிசலுமகிழ்ச்சியுந்துயருமருவிமலப்பசுவுமெண்ணரிய
பதியுமொருபொருளெனவேபிதற்றிச்
சகமனைத்தும்பிராந்தியெனத் தடுமாறுஞ்சிலர்தஞ்சழக்
கொழிந்துசித்தாந்த சைவநெறியுறற்கே. (௫௬)

சைவமெனுஞ்சித்தாந்தத்தனிநெறியேசரியைத்
தருநெறியாமெனவுமடிசார்ந்தவரைப்புரக்குந்
தெய்வமுமீயேயெனவுமேனையவன்மதமுஞ்
செறிமலத்ததேவினமுமபக்குவராஞ்சீவ
ருய்வகையங்கவர்வினையின்சோபானத்தேற்றமுறக்
கருத்தியமைத்ததெனவுமுணர்ந்தனனற்
சைவலப்பூங்குழலுமையேசெவ்வலூரரசே
சண்டனையுமகிடனையுந்தகர்த்தபுராதனியே. (௫௭)

தனியாகிப் பலவாகிச் சத்தாகியசத்தாஞ்
சகமுழுதுமாயையினுந்தருமுதலாயன்பர்
மனமொழியாக்கையிற்புரியும்வழிபாட்டினன்றி
மாமறைக்குந்திருமாற்குமலரவர்க்குமரிதா
யினியபிரிதிவியாதியாறாறுங்கடந்தே
யிலங்கொளியாயறிவிலியென்னிலைநயத்துமிருக்கும்
புனையிழையைச் செவ்வலூருடைய திரிபுரையைப்
போற்றுதாருடலன்றேபொறையாமிப்புவிக்கே. (௫௮)

புவியனைத்துந்தனிபூத்தபூங்கொம்பேஞானப்
புணரியே தொண்டருளப்புண்டரிகம்விரிக்கு
மவிரொளியாய்ஞானவானந்தவடிவாகி
யண்டமாயண்டத்துக்கப் புறமாய்நின்ற
குவிமுலைச்சிற்றிடைக்கரும்பே யரும்பனையமுறுவற்
குணக்குன்றே மன்னிமையக்குன்றளித்தபிடியே
சிவமனைஞ்சேர் செவ்வனகர்க்குமரியேயுனைத்
தெரிசித்தார்க்கினியவனதென்புலக்கோமகனே. (௫௯)

மகவுதவுமன்னுலகிற்றனதனெனச்செல்வ
வகையுதவுமகபதியுமதிக்கும்வாழுதவும்

புகழுதவுங்குணனுசவுந்தனதருமைபுறவாப்
    புலனுசவுநலனுசவும்பொருளுறநிறையுமுசவு
மிகலுறுமிப்பலபோகநுகர்த்தி த்தெளித்தி
    வெய்தமலபரிபாகதிருபதமுஞ்சூட்டி
புகலிரவும்பகலுமிலாவொருபதத்தேயின்பம்புணர்த்த
    மடியவரைச்செவ்வற்புரியுறைபொற்கொடியே. (௯௰)

வேறு.

கொடியையேரிடைப்பிடிநடைப்
    படைவிழிக்குடமுலைமடநல்லார்
படிறுமெய்யெனச்செறிநுணர்வின்றியே
    பரதவித்திடுநெஞ்சே
கடியதெனப்புலக்கோமகன்றண்டனை
    கடந்திடற்கெளிதன்று
லொடிவிலன்பொடுநினைதியேலுய்குதஞ்
    செவ்வலூருமையென்றே. (௯௧)

உமைபரம்பரைபகவதிதிரிபுரை
    யுரககங்கணியெல்லாச்
சமையமுந்தொழுதற்பரையற்பரைச்
    சார்ந்திடாமையின்ஞானக்
குமரியம்பிகைநிம்பரைபயிரவி
    குண்டலியெனவேத்திக்
கமையுளார்செவ்வலடைந்தவர்
    படைத்தலுங்காத்தலும்பெறுவாரே. (௯௨)

பெறுவதாம்பயனெஞ்சமேவஞ்சனைப்
    பேதையர்மயலன்று
பிறவதிவ்வுடலிகளுமென்ப
    திங்கேவருமுணர்விலா
தறமெலாம்புரிந்தளித்தனஞ்
    செவ்வலூரன்னையைத்தொழுதிப்பாய்

திருவரும் பசிக்குவப்பரோதாய்
    முலைத்தியபாலலதொன்றே. (௬௩)

ஒன்றிரண்டெனவொளியென
    வெளியெனவுளதெனவிலதென்ன
நின்றநின்னிலைநின்னருளடைந்திடு
    நிரரேசிறிதோர்வர்
பொன்றலின்றியவவாக்கடற்
    கிடந்திடும் புலையனேற்கெளிதாமோ
குன்றநல்கிய பெருந்தவக்குமரியே
    செவ்வலூர்க் குணக்குன்றே. (௬௪)

குன்றிரண்டெனச்சரோருகமுகையெனக்
    கோங்கினரும்பென்ன
வென்றிமாமதன்முடியெனப்பணைத்திடும்
    வெம்முலைமடநல்லார்
கன்றுகாமசாகரத்திடைக்கிடக்குமென்
    கடைப்படுமனநின்று
ளென்றுமாசிறுஞ் செவ்வலம்பதியில்
    வீற்றிருக்குமாமதவம்மே. (௬௫)

அம்மவென்கொலோ விழுதயருறவு
    கொண்டவளியைப்பொருளென்று
செம்மைநன்னெறியொருவியதியரிற்
    றீயனென்றனையாண்டு
பொய்மைதீர்ந்தநின்புகழுரைத்திடுபணி
    புரிதனைபுகழோங்கி
மெய்ம்மணந்திடு செவ்வலம்பதியில்வாழ்
    விறலரிப்பரியூர்வோய். (௬௬)

ஊரளப்பிலவின்றவரளப்
    பிலருவந்தவரமைத்திட்ட
பேரளப்பில செய்வினையளப்பில
    பேதைமங்கையர்தம்பா

ஞாளப்பிலவிங்ஙனமாகி
லெனஞருவினையடைகிற்பேன்
கிரளப்பிலமருவிய செவ்வலூர்ச்
செங்கண்மாறெழுமன்னே. (௬௭)

அன்னிடப்படுபொருளினவே
பொருளெனவரிவையர்முலைப்போகந்
தன்னினினைபெனவவலிமைய
கிலெயனக்தளர்ந்திடுமடநெஞ்சே
யுன்னையல்லதிங்குனக்கினி
பேதையிலாதகொநுயவெண்ணிற்
கன்னிசெவ்வலிற்பகவதி
திருவடிகருதல் கடனுமே. (௬௮)

கடவிறந்த வெங்காலனைக்கடந்திடல்
காமனுனையநூறல்
விடகிறந்தகளமடநதையர்மயலெனும்
வெம்பலையறக்கோற
அடவிறந்தியகசையொரீஇயானைவ
மொருவிமேனிலைசேற
லடவிறந்தியவரிப்பரிச் செவ்வலூ
ரமலைமயேதருமனறே. (௬௯)

தருவிருக்குமத்தலைவனுங்கலை
மகடலைவனுமணிமார்பிற்
றிருவிருக்குமெய்த்தலைவனுமிறைஞ்சுநஞ்
செவ்வலூர்ப் பெருமாட்டி
மருவிருக்குமாமலர்க்கழலிணைகிலர்
மண்ணிலெண்ணிலவான
கருவிருக்குமத்துயரையுங்கொடிய
சாக்காட்டையுங் கடப்பாரோ. (௭௰)

வேறு.

இடக்கலாகாப்பெருந்துயரங்
கடக்குநெறியைக் கருதாதே
விடக்கெனறென்புகழித்தொழுகும்
வெய்யகுருதிநுகர்நாயிற்
றடக்கையொழுக்கென்றுழல்கின்ற
தமியேனுய்யுந்தரமுளவோ
படப்பைநாகத்தணைநெடுமால்பணியுஞ்
செவ்வற்பதிவாழ்வே. (௭௧)

வாழ்வுவரினங்கதனாலே
மயங்கியிறுமாப்படையாது
தாழ்வுவரினுஞ்சலித்துமனந்
தளர்ந்திடாதவ்விளைவனைத்து
மூழ்வன்மையினால்விளைவதென
வுன்னிச்சமஞ்செய்நெறிதாராய்
காழ்வன்புயத்துமாகடனுயிர்கவிழ்த்தோய்
செவ்வற்கனங்குழையே. (௭௨)

குழையுமனமுநின்வடிவே
குறிக்கும்விழியுமுனதடியில்
விழையுமன்புநினதடியர்
மேயவவைக்கட்புகுந்திறைஞ்சிப்
பழகுநட்புமெனக்கென்று
பாலிப்பாயோசெவ்வனகர்க்
கழையுமலரும்பொறுத்த
திருக்கரத்தாய்கனியதரத்தாயே. (௭௩)

தாயன்புடையதந்தைகிளைதா
ரந்தனையர்தளர்வெய்த
நோயும்பேயுங்கடுநாயு
நொய்யநரியுந்தமதென்னுங்

காயங்கலையக்கெடுங்கூற்றங்
கருக்கும்பொழுதன்கருணைவடி
வாயும்பரிசுசெவ்வனைஞ்சாதே
யளித்தல்கடனுனக்கே. (எச)

கடலைக்கடக்கக் கருதினர்கள்
கலனைப்பெறவாவினையாதே
நடவுக்கரத்தாற் கடப்பலெனப்
புகுந்தனருமதபோலும்
முடவுப்படத் தபணிச்செவ்வன்
மூவாமுதலேயுனையன்றிப்
படுமுற்பவத்தபசுக்கள்பிறபசுக்
கட்டமைப்பரவுதலே. (எரு)

பாசமடையாகத்திருவைப்
பருகுஞானப்பாங்குடராம்
பிரசமலர்ப்பூந்தடங்கள்பல
பிறங்குஞ் செவ்வற்பெருமாட்டி
விரைசெய்கமலச் சரணிறைஞ்சு
மிக்கார்க்குலகந்தனிபுரக்கு
மரசும்பொருளென்றயனபதமு
மரிதன்பதமுமற்றுமே. (எசு)

அற்றூர்சுற்றத்தொடர்பினைத்து
மடைந்தாரரனென்றடியரவை
கற்றாராகமுதற்கலைகள்
கடந்தார் வினைகள் சதியடையப்
பெற்றார்தொகையையினைத்தென்னப்
பேசயாரூர்பிரிதலிற்
பற்றுரெனக்குன்கழலலது
செவ்வற்பதியிற்பாசிலவையே. (எஎ)

சிவமேயெல்லாஞ்செறிந்துளதச்
சிவமேயென்றஞ்சிறந்துளது

சிவமே யின்பநிறைந்தளது
    சிவமே யன்பிற்கசிந்தளது
சிவமே யெல்லாமறிந்தளது
    சிவமேபதியென்றுணர்ந்தடங்குஞ்
சிவமேயெனக்குத்தரல்வேண்டுஞ்
    செவ்வற்பதியிற்றிரிபுரையே. (எஅ)

புரையற்றிருக்குமடியர்மனப்
    போதிலிருக்குமுனதுசரண்
கரையற்றிருக்கும்போராசைக்
    கடலிற்கிடந்துதடுமாறி
நிரையத்துயருக்கிலக்காகின்ற
    தமியேன்மனக்கல்லி
லுரையற்றுணர்வற்றிடுஞ்செவ்வலுமையே
    யெங்ஙனுறத்தருமே. (எகூ)

தருவரிறைஞ்சுமகிடமுகச்சழக்
    கன்றனைச்சண்டனைத்தடிந்து
புகலென்றுனதுசரணடைந்தபுத்
    தேட்குலத்தைப்புரந்தனையா
லிகலுந்தெவ்வாமையவர்தமக்கிடைந்தே
    யின்னலடைந்தவெனை
யகிலமளித்தசெவ்வலணங்கரசே
    யளித்தல் கடனுமே. (அய)

வேறு.

கிடலுற்றிடுகோசிவிகைதாழுவே
மிடலுற்றிடுவிந்தைதிருக்கலைமா
னுடனுற்றிடுவோருயர் செவ்வலருட்
படிவத்துமையாளடிபற்றினரே. (அக)

பற்றுவதுபார்புகழ்செவ்வனகர்
முற்றுமுலைமுத்தருளத்தமுதே

கற்றோரவைகண்ணுகிலேற்குமவா
வற்றோர்கள் விரும்புமுனங்கிரியே. (௮௨)

கிரிபோனகிலத்தமிழோர்மயலாற்
புரிபோனமனத்தொழுபொன்றிவிடா
தரிபேசுமுனங்கிரியெய்தவரே
கரியாகியசெவ்வனகர்ப்பரையே. (௮௩

கற்பின்றியகாரிகையாரினனக்
கற்பின்றியவென்னையுமாள்குதியோ
பொற்பொன்றியசெவ்வல்புரந்தருளும்
வெற்பின்றவமாகியமெல்லியலே. (௮௪)

இயலுற்றிடுமேதகமடந்தையர்த
மயலிற்றமியேனைமயக்குதியோ
வயலிற்கயன்மல்கிய செவ்வனகர்ப்
புயலுற்றகுழற்பரிபூரணியே. (௮௫)

பரிபூரணிபங்கயமங்கைதொழுந்
திரிசூலிதிகம்பரிசெவ்வனகர்ப்
புரிபுன்சடையாள்புகழைப்புகழா
ரெரிவாய் நரகத்திலிருப்பவரே. (௮௬)

இருக்காதியிசைக்குமுனைப்பரவிக்
கருக்கார் பிறவிக்கடல்செவ்வனகர்
முருக்காமதரத்தனைமுன்னிவினைப்
பெருக்கார்நமனார்வலிபேசரிதே. (௮௭)

அரியாமயனுமயிராவதனும்
பெரியாருமுனின்னருள்பெறுவரோ
லரியார்தினில்வேறுயிர்கட்கெவரோ
தரியார்தொழு செவ்வலசஞ்சலியே. (௮௮)

சலசங்கள்சலஞ்சலமாவிதோறும்
பலசேர்ந்துபயினிதி செவ்வனகர்க்